Praise the Lord: Let us Pray.

## லூக்கா/Luke 18:35-43 & லூக்கா/Luke 19:1-10

**லூக்கா/Luke 18:35-43** (பக்கம் 111)

35. பின்பு அவர் எரிகோவுக்குச் சமீபமாய் வரும்போது, ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான்.
36. ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு, இதென்ன என்று விசாரித்தான்.
37. நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது அவன்: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான்.
38. முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ: தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான்.
39. இயேசு நின்று, அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார்.
40. அவன் கிட்டவந்தபோது, அவர் அவனை நோக்கி:
41. நான் உனக்கு என்னசெய்யவேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன்: ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும் என்றான்.
42. இயேசு அவனை நோக்கி: நீ பார்வையடைவாயாக, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார்.
43. உடனே அவன் பார்வையடைந்து, தேவனை மகிமைப்படுத்திக்கொண்டே, அவருக்குப் பின்சென்றான். ஜனங்களெல்லாரும் அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள்.

35As Jesus approached Jericho, a blind man was sitting by the roadside begging. 36When he heard the crowd going by, he asked what was happening. 37They told him, "Jesus of Nazareth is passing by." 38He called out, "**Jesus, Son of David, have mercy on me!"**

39Those who led the way rebuked him and told him to be quiet, but he shouted all the more, "Son of David, have mercy on me!"

40Jesus stopped and ordered the man to be brought to him. When he came near, Jesus asked him, 41"What do you want me to do for you?" "Lord, I want to see," he replied.

42Jesus said to him, "Receive your sight; your faith has healed you." 43Immediately he received his sight and followed Jesus, praising God. When all the people saw it, they also praised God.

இயேசு வருகிறார் என்பதை விசாரித்து அறிந்து, விசுவாசத்தோடு கூப்பிட்டான்.

"உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" எனறு இயேசு குறிப்பிட்டார்.

அவன் கண்பார்வை பெற்றான்.

இந்த பார்வையில்லாத குருடன், இயேசுவையும் அவருடைய வல்லமையையும் பற்றி அறிந்து, அவரால் சுகப்படுத்தமுடியும் என்பதை நம்பி, அந்த நம்பிக்கையிலே உறுதியாக இருந்து, அதாவது விசுவாசித்து, "இயேசுவே, எனக்கு இரங்கும்" என கூப்பிட்டான். மற்ற மனிதர்கள் தடுத்தும்கூட அதை பொருட்படுத்தாது இயேசுவை கூப்பிட்டான்.

*அவன் கேட்டதைப் பெற்றுக்கொண்டான். இரட்சிக்கப்பட்டான்.*

கண்பார்வை உள்ள ஒருவன் இயேசுவை பார்க்க முயற்சிக்கிறான்…..

**லூக்கா/Luke 19:1-10** (பக்கம் 111)

1. அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்துபோகையில்,
2. ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன்,
3. இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல்,
4. அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான்.
5. இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்.
6. அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு போனான்.
7. அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்.
8. சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்.
9. இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே.
10. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.

1Jesus entered Jericho and was passing through. 2A man was there by the name of Zacchaeus; he was a chief tax collector and was wealthy. **3He wanted to see who Jesus was**, but being a short man he could not, because of the crowd. 4So he ran ahead and climbed a sycamore-fig tree to see him, since Jesus was coming that way.
5When Jesus reached the spot, he looked up and said to him, "Zacchaeus, come down immediately. I must stay at your house today." 6So he came down at once and welcomed him gladly.
7All the people saw this and began to mutter, "He has gone to be the guest of a 'sinner.' "
8But Zacchaeus stood up and said to the Lord, "Look, Lord! Here and now I give half of my possessions to the poor, and if I have cheated anybody out of anything, I will pay back four times the amount."
9Jesus said to him, "Today salvation has come to this house, because this man, too, is a son of Abraham.
10For the Son of Man came to seek and to save what was lost."

இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான்.

பார்ப்பதற்கு பிரயாசப்பட்டான்.

இயேசு அவனைத்தேடி வந்து, அவன் எண்ணத்துக்கு மேலாக அவனை ஆசீர்வதித்தார்.

*முதலாமவன்..*

பார்வையில்லாதவன்....இயேசுவை விசாரித்து அறிந்து விசுவாசத்தோடு கூப்பிட்டபொழுது, அவன் பார்வை பெற்றான். ........

*இரண்டாமவன்...*

பார்வையுள்ளவன்.....இயேசுவைப்பற்றி அறிந்து அவரைப் பார்க்க முயற்சித்தபோது, அவன் இழந்திருந்த ஆத்தும இரட்சிப்பை அவனுக்கு இயேசுவே தேடிச்சென்று கொடுத்தார்.

விசுவாசத்தோடு இயேசுவை கூப்பிடுங்கள்:

இயேசுவே இந்த ஜீவனுள்ள வாத்தையாக இருக்கிறார்.

இந்த வாத்தையை பார்க்கவும் வாசிக்கவும் தியானிக்கவும் முயற்சிசெய்யுங்கள்.

இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்று சொன்ன இயேசு உங்களைத்தேடிவந்து இரட்சித்து ஆசீர்வதிப்பார். அவரைப்பற்றிக்கொண்டு அவரோடு வாழ முயற்சிசெய்யுங்கள். அவர், உங்களை வழுவாதபடி காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர். ஆமென்.

ஒவ்வொரு மனிதனும் தன் ஆத்மாவை இழந்திருப்பதை உணராமலேயே வாழ்கிறார்கள்.

இது ஆச்சரியமல்ல......

தன் மாம்ச உடலின் இழப்பையே அறியாமல் எவ்வளவோ பேர்கள் வாழ்கிறார்கள் !

தன் உடல்நிலைக்கு நல்லதல்ல என அறிந்தும் அதை செய்கிறவர்கள் உண்டு.....

தன் உடலிலே நோய்கள் உள்ளன என்பதை அறியாமலே பலர் வாழ்வதுமுண்டு......

(தன் இருதயம் தனக்கும் மீறியது. அதை ஆட்கொள்ள ஆத்மாவின் பெலன் வேண்டும்.)

*இப்படி,* தன் உடலின் இழப்பையே அறியாமல் எவ்வளவோ பேர்கள் வாழ்கிறார்கள்! *என்று சொன்னால்*

.....தன் ஆத்மாவின் இழப்பை அறியாமல் வாழ்வது ஆச்சரியமல்ல....

இந்த உலக வாழ்வு முடிவதற்குமுன் ஒவ்வொரு மனிதனும் ஆத்மீக வாழ்வை உணர்ந்தால்,
இந்த வாழ்வுக்குப்பிறகு இறைவனோடு வாழ்க்கை தொடரும்......

இந்த சகேயு காலத்தில் இயேசுவைக்குறித்து இருந்த விவரத்தைவிட,
இப்பொழுது நம்மிடம் உள்ள விவரங்கள் அனேகமும் பரிபூரணமும் உடையது.

கிறிஸ்துவுனுடைய பரிபூரணமான விவரங்களை நம் கையில் கிறிஸ்துவே கிருபையாய் கொடுத்துள்ளார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இந்த வார்த்தைகள் மூலமாக நம்மை ஆட்கொண்டு ஆசீர்வதிப்பாராக.

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.
For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross. (Col.1:19-20)

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய கிறிஸ்து,.....

நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, அவர் நமக்கு அருள்செய்ய வல்லவர்.
நமக்குள்ளே அவர்மேல் உள்ள விசுவாசம் மேலும் மேலும் வளரட்டும்.

எந்தசூழ்நிலை நம்மைத் தடுத்தாலும் அந்த விசுவாசம் நம்மிடம் குறையக்கூடாது. ஆமென்...
*(பார்வையில்லாத அந்த குருடனை பலர் தடுத்தும், அவன் கூப்பிடுவதை நிறுத்தவில்லை. அதிகமாக்கினான.)*
கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்தால் இம்மைக்கு மட்டுமல்ல என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் நித்திய ஜீவனை நமக்கு கொடுக்க வல்லவர். ஆமென்.

Let us Pray